12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்
அவர்கள் அருளியது

# சித்தர் இராமாயணம் - III

# யக்ஞவல்லியின்

# இராமாயணக் குறிப்புக்கள்



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்.**



## இந்து இலக்கியக் கழக வெளியீடு

**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,118 மாசி மாதம்.**

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

**ஐந்தாம் பாகம்**

**சித்தர் இராம புராணம் = சித்தர் இராம காதை =**

## சித்தர் இராமாயணம்.

**"யக்ஞவல்லி இராம புராணம்" = "யக்ஞவல்லி இராமகாதை" =**

## "யக்ஞவல்லி இராமாயணம்."

திரேதகா யுக நாயகர் யக்ஞவல்லி எழுதியுள்ள குறிப்புகள் '**சித்தர் இராமாயணம்**' என்ற பெயரில் இந்த நூற்றுண்டில் 1936, 1942, 1947, 1952, 1956,... என்று பலமுறை அச்சிடப்பட்டு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள தமிழர்களுக்கு வழங்கப் பட்டுள்ளன. ஆனல், அவை தமிழ்மொழி உணர்ச்சி, இன உணர்ச்சி, இனப் பற்று, பண்பாட்டுப் பெருமிதம், நாகரீகப் பிடிப்பு, ... முதலியவை தமிழரிடையே நலிந்தும், மெலிந்தும், நோயுற்றுக் கிடந்தமையால் செல்வாக்குப் பெறவில்லே. எந்த ஒரு சலனத்தையும் ஏற்படுத்தவில்லே. எனவே, இப்பொழுது **இந்து மறுமலர்ச்சி இயக்கம்** மீண்டும் சித்தர் இராமாயணத்தை அச்சிட்டு வெளியிடுகிறது. மாபெரும் தமிழின வரலாருன '**யக்ஞவல்லி இராமாயணம்**' இனியாவது தமிழர்களால், மெய்யான இந்துக்களால் உணரப்படட்டும்.

(ஒப்பம்)

**அன்பு**

**குவலய குருபீடம், இந்துமதத் தந்தை,**
**ஞாஞச்சாரியார், குருமகா சன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்.**

# <u>சித்தர் இராமாயணம் = யக்ஞவல்லி இராமாயணம்</u>

1) இராமாயணம் வரலாரு? அல்லது வரலாற்று அடிப்படையில் தோன்றிய கதையா? அல்லது முற்றிலும் கற்பனையாகக் கூறப்பட்ட கதையா? அல்லது சமயநீதி விளக்கிட ஞானிகளால் உருவாக்கப் பட்ட புராணமா? ... என்ற வினுக்களுக்கு முழுமையான விடை இன்று வரை கிடைக்கவில்லை! கிடைக்கவில்லை! கிடைக்கவில்லை! கிடைக்கவே இல்லை! இந்த அவல நிலை அகற்றப் பட்டிடல் வேண்டும் என்பதற்காகத்தான் சித்தர் இராமாயணம் குறிப்பிட்ட அளவாவது வெளியிடப்படும் முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

2) நாட்டில் பல இராமாயணங்கள் இருந்த போதிலும், வால்மீகி இராமாயணம், நாரதர் இராமாயணம், போதாயனர் இராமாயணம், துளசிதாசர் இராமாயணம், கம்பர் இராமாயணம், ... முதலியவை புகழ் பெற்று விளங்குகின்றன. ஆனுல், 'சித்தர் இராமாயணம்' என்று ஒன்று இருப்பது ஏறத்தாழ யாருக்கும் தெரியாது (தெரியவில்லை). இதற்குக் காரணம் '**சித்தர்**' என்ற சொல்லுக்குப் பொருள் தெரியாததும், பதினெண்சித்தர்களாலும், பதினெட்டாம்படிக் கருப்புக்களாலும் உருவாக்கப் பட்ட நாற்பத்தெட்டு வகைப்பட்ட சித்தர்களைப் பற்றிப் பாரம்பரிய உரிமையுடையவர்களைத் தவிர மற்றவர்கள் அனைவருக்கும் தெரியாததும்தான்.

எனவேதான், <u>**"இம்மண்ணுலகில் உள்ள மதங்கள் அனைத்தையும் சார்ந்த அருளாளர்கள் அனைவருமே சித்தர் இனத்தைச் சேர்ந்தவர்கள்தான்"**</u> ... என்ற குருபாரம்பரிய வாசகத்தை உலகறியச் செய்ய வேண்டியிருக்கிறது. <u>**இந்த ஒரே வாசகம் போதும், உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்கும், உலக மதங்களை**</u>

**ஒற்றுமையோடு இணைத்து செயல்படச் செய்வதற்கும்**. இப் பேருண்மையினை முதலில் தமிழர்கள் நன்கு புரிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும். அப்பொழுதுதான் இவர்கள் தாங்கள் சார்ந்துள்ள புத்தம், சமணம், கிறித்துவம், இசுலாம், ... முதலிய மதங்களோடு ஒன்றித்; தாங்கள் தமிழர்கள் என்ற இன உணர்வையும், மொழி உணர்வையும், நாட்டு உணர்வையும் மறுத்து, வெறுத்து, மறந்து, துறந்து, பழித்து, இழித்து, நலிவுபடுத்திச் செயல்படும் நிலைகள் மாறிடும்! மாறிடும்! மாறிடும்! மாற்றப்பட்டிடும்! மாற்றப்பட்டிடும்! மாற்றப்பட்டிடும்!

இதைச் சற்று நேரடியாகப் பச்சையாகச் சொல்ல வேண்டுமானால்; தமிழினம்தான் இந்த உலக இனங்களுக்கெல்லாம் முதல் இனம், மூத்த இனம், தாய் இனம் என்ற பேருண்மையும்; தமிழ்மொழிதான் இவ்வுலகின் முதல் மொழி, மூத்த மொழி, தாய் மொழி என்ற பேருண்மையும்; தமிழகம்தான் இம்மண்ணுலகின் அகப் பண்பாட்டிற்கும், புற நாகரீகத்திற்கும் மற்றுமுள்ள அனைத்து வகையான அறிவியல் வளர்ச்சிக்கும் மூலமானது, முதலானது, தாயானது..... என்ற பேருண்மையுமே **உலக சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை உருவாக்கிடும்! உருவாக்கிடும்! உருவாக்கிடும்!** என்ற பேருண்மையைத்தான் வலியுறுத்திக் கூற வேண்டும்!

கிரேதகா யுகமான முதல் யுகத்தில் சிவன், முருகன், சத்தி, திருமால், பிறமண், நாரதர், இயமன், குபேரன், இந்திரன், தேவேந்திரன், மாரியப்பன் (வருணன்), காத்தப்பன் (வாயு) ... முதலியவர்களின் வரலாறு புராணமாக உருவானது போல்; இரண்டாவது யுகமான திரேதகா யுகத்தில் இராமன் ஒருவனின் வரலாறே **'இராமாயணம்'** என்ற புராணமாக உருவாயிற்று. இதைப் போலத்தான் மூன்றுவது யுகமான துவாபர யுகத்தில் வாழ்ந்த கண்ணனின் வரலாறு **'பாரதம்'** என்ற புராணமாக உருவாயிற்று. நான்காவது யுகமான கலி யுகத்தில் அருளாளர்களின் வரலாறுகள் எண்ணற்ற புராணங்களாக

உருவாகி வருகின்றன. எனவே, எந்தப் புராணத்தையும் கதை என்றோ அல்லது கற்பனைக் கதை என்றோ கூறி மிகச் சிறந்த அறிவுச் செல்வங்களான புராணங்களை நம்மவர்கள் இழக்குமாறு செய்து விடக் கூடாது! புராணங்கள்தான் நமக்கு அமைதியை, நிம்மதியை, நிறைவை, போதுமென்ற உணர்வை, அன்பு வழியை, அற வழியை, கூடி வாழும் சமாதான வழியை, ஒற்றுமை வளர்க்கும் வழியை,..... வழங்கும் வல்லமையையும், வள்ளன்மையையும் வழங்கக் கூடியது.

அதாவது புராணம்தான் மனிதப் பண்புநலன்கள் செழிப்பாக உள்ள வாழ்க்கைக்கு வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக விளங்கிட முடியும்! விளங்கிட முடியும்! விளங்கிட முடியும்! புராணிகர்களை இழித்தும் பழித்தும் பேசிக்; கேலியும் கிண்டலும் செய்கின்ற நாத்திக வாதிகளும், பகுத்தறிவு வாதிகளும்; நமது கட்டமைப்புக்களையும், கட்டுக் கோப்புக்களையும், பண்பாட்டுப் பிடிப்புக்களையும், நாகரீக உயிர்த் துடிப்புக்களையும் சிதைத்துச் சீரழிக்கும் சிறுபிள்ளைகள் ஆவார்கள்! சிறுபிள்ளைகள் ஆவார்கள்! சிறுபிள்ளைகள் ஆவார்கள்! **இவர்களையெல்லாம் திருத்த வேண்டுமென்றால், குறிப்பிட்ட அளவாவது சித்தர்களின் இலக்கியச் செல்வங்கள் அச்சேறி நூல்களாக வெளிவர வேண்டும்! வெளிவர வேண்டும்! வெளிவர வேண்டும்!**

3) முதல் யுகத்தில் வாழ்ந்த பல சித்தர்களின் வாழ்நாட் குறிப்புக்களும், செயல் குறிப்புக்களும், உலகியல் செய்திக் குறிப்புக்களும்தான் அருளுலக வரலாறுகளையும், தத்துவங்களையும், சித்தாந்தங்களையும் அறிவுலகத்தாரும் புரிந்து விரும்பி ஏற்கச் செய்கின்றன. இதன்படிதான், இரண்டாவது யுகமான திரேதகா யுகத்தில் நெடுங்காலம் வாழ்ந்த யக்ஞவல்லியின் எழுத்துக் குவியல்கள் இராமாயணத்தை மெய்யான வரலாறாக நிலைநாட்டுகின்றன! நிலைநாட்டுகின்றன! நிலைநாட்டுகின்றன! இராமாயண காலத்தில் வாழ்ந்த இராமன், சீதை, இராவணன், தசரதன், சனகன், மண்டோதரி

(வண்டமர்குழலி), எண்கோணமேனியான், வசிட்டர், ... முதலியவர்கள் அனைவரும் சித்தர்கள்தான். அதாவது சாதாரண மனித வாழ்க்கைக்கு அப்பாற்பட்டு, சாதாரண மனிதர்களை விட உயர்ந்து, அவர்களுக்குத் தலைவர்களாக இருப்பவர்கள் அனைவரும் சித்தர்கள்தான் என்ற **மெய்யான இந்துமதப்** பேருண்மையினை அனைவரும் உணர வேண்டும். அப்படிச் சாதாரண மனிதர்களை விட உயர்ந்தவர்கள்தான் சித்தர்களாக வாழ்ந்திருக்கிறார்கள்! வாழ்ந்து வருகிறார்கள்! இந்தச் **சித்தர்களுக்கிடையில் ஏற்பட்ட போராட்டமே இராமாயணம்**.

**யக்ஞவல்லியின் குறிப்புக்கள் அவர்தான் தசரதனுக்கு இராமனை வைத்து ஈமக் கடன் செய்தார்** என்றும், அவர்தான் **இராவணன் இறந்த போது அவன் மனைவி வண்டமர்குழலிக்கும் சேர்த்து ஈமக் கிரியை செய்தார்** என்றும்; **இராமன் இறந்த போது அவன் மக்கள் இலவ குசர்களை வைத்து ஈமக் கிரியை செய்தார்** என்றும் குறிப்பிடுவது சிறப்பு வாய்ந்தது. எனவேதான், யக்ஞவல்லியின் குறிப்புக்கள் சித்தர் இராமாயணம் என்ற பட்டப் பெயரைப் பெற்றது.

இராமன் காலத்தில் வாழ்ந்த பதினெட்டு வால்மீகிகளும் இந்த யக்ஞவல்லியின் குறிப்புக்களையும், நேரடி வழிகாட்டலையும் அடிப்படையாகக் கொண்டுதான் இசைப் பாடலாகக் 'கீதை' என்றும், செய்யுள் எனப்படும் 'கவிதை' என்றும், காப்பியமாகக் 'காதை' என்றும், வரலாறைக் 'கதை' என்றும் நான்கு வகைப்பட்ட இலக்கியங்களை எழுதினார்கள்.

கலி யுகத்திலும் ஆதிகவி வால்மீகி என்ற கவிஞர் பரம்பரை வாழையடி வாழையாகத் தோன்றிச் சூரிய குலத்தின் வரலாறு விளக்கும் இராமாயணத்தைப் புதியபுதிய இலக்கியங்களாகப் படைத்து வருகிறார்கள். இதுவும் இராமன் காலம் முதல் கணக்கற்ற கம்பர்கள் இருபத்தேழு வண்ணங்களில் சுவைமிக்க இலக்கியங்களைப் படைத்து வருகிறார்கள். இவர்களும் சூரியகுல குருபீடம் யக்ஞவல்லியின்

ஆணையும், அறிவுரைத் துணையும் பெற்றுத்தான் சித்தர் காகபுசுண்டரின் சூரியகுலப் பெருமையைச் சிறப்பாகக் 'காப்பியம்', 'தாலாட்டு', 'கழங்கு', 'அம்மானை', 'ஊசல்', 'வள்ளை', 'தெம்மாங்கு', 'கும்மி', 'காவடிச் சிந்து', 'உடுக்கைப் பாட்டு', 'உழவர் பாட்டு' ... என்ற இலக்கிய வண்ணங்களில் பாடி வருகிறார்கள். இப்படிச் சூரியகுல வரலாறு கூறும் இராமாயணம் அழியாநிலை பெறச் செய்த யக்ஞுவல்லியின் குறிப்புக்கள்தான் உண்மை வரலாறு கூறும் சித்தர் இராமாயணம் என்ற சிறப்பினைப் பெறுகின்றது.

4) சித்தர் காகபுசுண்டர் எனும் காக்கையரின் சூரிய குலத்தில் தோன்றியவர்களில் 'தமிழ்க் கடல்', 'தமிழ்ப் புயல்', 'தமிழ்த் தேன்', 'தமிழ்க் குரு', 'தமிழ்ப் பீடம்', 'தண்டமிழ் ஆசான்', 'செந்தமிழ் யாழ்', 'பைந்தமிழ்க் குழல்', 'தமிழ் முதல்வன்', 'தமிழ் முனி', 'சூரியகுலப் பீடம்', 'சார்பிலா அறவோன்', ... என்ற எண்ணற்ற சிறப்புப் பட்டங்களைப் பெற்றவரே இந்த யக்ஞுவல்லி! இவர் வசிட்டர், விசுவாமித்திரர், சனகர், தசரதன், இராவணன், வாலி, கார்த்தியார்ச்சுனன், எண்கோணமேனியான், பரசுராமர், அகத்தியர், தண்டகாரணிய முனிவர்கள்,... முதலிய அனைவருக்குமே வேண்டியவராக, உற்ற வழிகாட்டியாக, குருவாக, தலைவராக, ... இருந்திருக்கிறார். ஆனால், யாராக இருந்தாலும் இந்த யக்ஞுவல்லியிடம் தங்களின் நிலைகளை முழுமையாகக் கூறி அறிவுரை கேட்டால்தான் அறிவுரை வழங்கப்படும். அது மட்டுமல்ல, இதே யக்ஞுவல்லி யாருடைய வாழ்விலும் குறுக்கிடுவதில்லை; யாரைப் பற்றியும் பிறரிடம் பேசுவதில்லை! அடிக்கடி நாடு முழுவதிலும் சுற்றுப்பயணம் செய்தாலும், யார் எதிர் கொண்டழைக்கிறார்களோ அங்குதான் தங்குவார்.

சுற்றுப்பயணத்தில் கோயில்களில் (அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்கள், கருவறைகள், வெட்டவெளிக் கருவறைகள்,... கோயில் என்ற சொல்லால் குறிக்கப் படுகின்றன இங்கு) பூசை செய்வதும், தேவையானவர்களுக்கு அருள் வழங்கிட 'ஐந்தீ வேட்டல்' (ஓமம், ஓகம், யாகம், யக்ஞம், வேள்வி), 'முத்தீ ஓம்பல்' (கந்தழி

வழிபாடு, கொடிநிலைத் தொழுகை, வள்ளிநிலைப் பூசை = பருவபூசை), தவம், மோன ஞான ஆசனம், ... முதலியவைகளைச் செய்திடுவார்.

இதற்காகவே, இல்லத்தில் தங்கும் போது ஒரு மனைவியைப் பூசைக்குரியவளாக்குவது என்றும், சுற்றுப் பயணங்களில் இரண்டாவது மனைவியை மட்டுமே பூசைக்குரியவளாக்குவது என்றும் முறை வகுத்துச் செயல்பட்டார். அதாவது முதல் மனைவி சந்திர குலத்துக் கார்த்தியாயினர் மகள் (சிவ கோத்திறம்) கார்த்தியாயினியை இல்லத்தில் பூசைக்குரிய தேவியாகவும், இரண்டாவது மனைவி சூரியகுலத்தைச் சேர்ந்தவரும் சனகரின் அமைச்சருமான மெய்த்திறரின் மகள் (மித்திரர் மகள் என்று வழக்காறு உண்டு) மெய்த்தேவியை (மெய்த்தேகி, மெய்த்தேவி, மையல் தேவி, மையல் தேகி, மைத்திரேயி ... என்ற பாட வேறுபாடுகள் இப்பெயருக்கு உண்டு) சுற்றுப்பயணக் காலத்தில் பூசைக்குரிய தேவியாகவும் பயன்படுத்தினர்.

அதாவது இல்லற நிறைவுக்கும், ஆசிரமப் பொறுப்புக்கும் உரியவளாகக் கார்த்தியாயினி என்ற முதல் மனைவியை உரியவளாக்கினர். அதே நேரத்தில் வெளியுலகத் தொடர்புக்கும், தெய்வீக உலக நிறைவுக்கும் உரியவளாக மெய்த்தேவி என்ற இரண்டாவது மனைவியை உரியவளாக்கினர். இதுவே இவருடைய திட்டமிட்ட வாழ்வியலையும், செயலாற்றலையும் விளக்கும்.

5) இவர் ஆண்டின் மூன்றில் ஒரு பங்கு காலமான நான்கு மாதங்களை மட்டுமே இல்லறத்துக்கு உரியதென்று வகுத்துக் கொண்டார். அதாவது, கார் காலம், கூதிர் காலம் எனும் இரண்டு பருவ காலத்தில் மட்டுமே இவர் தமது வீட்டில், ஆசிரமத்தில், குருகுலத்தில் தங்கினர். அதாவது, இவர் கங்கையாற்றின் நடுவில் தீவு போலிருந்த சமத்துவபுரம் (சமத்கார புரம், நான்வேத சமத்துவ புரம்) என்ற புதிய கோட்டை நகரில் தங்கிக் குடும்பம் நடத்துவதென்பது நான்கு மாதங்களுக்குத்தான்.

இவர் சூரியனர், யக்ஞவல்லி, யோகீசுவரர், மாந்தரீகவல்லி, தாந்தரீகச் சித்தியாளர், ... என்ற புகழையெல்லாம் தனது தந்தை பிறம்மராக்கதரும், தாய் அணங்கு அம்மையும் (இவருடைய தாயாரின் பெயர் 'அணங்கை' என்றும், 'சுணங்கை' என்றும் பாட வேறுபாடுகளுடன் குறிக்கப் படுகிறது குருபாரம்பரியத்தில்) பாராட்டும்படிப் பெற்றார். அதாவது, சூரியகுலம் தழைக்க சிறந்த யோகங்களுடன் பிறந்த இவரைப் பெற்றதற்கு மகிழ்ந்து 'சூரியனர்' என்று பெயரிட்டனர். ஆனல், இவர் நான்கு வேதங்களிலும் சிறந்து நான்கு வேதபுரி மக்களேயும் வென்றதால் 'நான் வேதபுரி ஈசர், நான்வேத வல்லி' என்ற புகழைப் பெற்றார். அக்காலத்து மன்னன்கள் இவரின் அன்பைப் பெறக் கங்கை நடுவில் பொற்கலசங்கள் மிகுந்த 'சமத்துவபுரம்' என்ற கோட்டை நகரைக் கட்டி கொடுத்தார்கள்.

இவர் எட்டு மாதம் சுற்றுப்பயணம் செய்து நான்மறைகளில் முழு தேர்ச்சி பெற்றதால் '**நான்மறை முற்றி**' என்றும்; யக்ஞம் செய்வதில் மாபெரும் வெற்றிகளேப் பெற்றதால் '**யக்ஞவல்லி**' என்றும் சிறப்பிக்கப் பட்டார். இவர், தமது யக்ஞவல்லி என்ற தகுதிக்கேற்ப யக்ஞங்கள் பல செய்து அரசர் முதல் ஆண்டி வரை அருள்நலம் துய்க்கச் செய்ததால் இவருடைய இயற்பெயர் ஆகிய 'சூரியனர்' என்ற பெயர் மறைந்து 'யக்ஞவல்லி' என்ற பெயரே நிலேத்தது. அதாவது, குருபாரம்பரியத்திலேயே பீடாதிபதிகள் யக்ஞவல்லி என்ற பெயரையே சிறப்பாகவும், அதிகமாகவும் பயன்படுத்துவதற்கு ஏற்ப இவர் யக்ஞம் செய்வதில் சிறந்து விளங்கினர். இவரது வரலாறு சூரியகுலச் சிறப்பாக உள்ளது.

6) இவர் ஆண்டின் மூன்றில் இரண்டு பங்கான எட்டு மாத காலத்தை முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்ற நான்கு பருவத்தையும் (i) கற்றலும் கற்பித்தலும், (ii) நோற்றலும் நோற்பித்தலும் (iii) உற்றலும் உற்பித்தலும், (iv) ஏற்றலும் ஏற்பித்தலும் என்ற நான்கு வகையான பணிகளுக்கு முழுமையாகச் செலவிட்டார்.

இந்த எட்டு மாத காலமும் மெய்த்தேவியுடன் சுற்றுப்பயணங்கள் மேற்கொள்வதில்தான் செலவிடப்பட்டன. இப்படி இவர் வாழ்ந்ததால்தான், இவர் (1)தசரதன், (2)சனகன், (3)கோகையன், (4)ஆதித்தன், (5)காகுத்தன், (6)மகதன், (7)சிவன், (8)பிறமண், (9)தேவநாதன், (10)இமயன், (11)தக்கன், (12)சிவி, (13)பகீரதன், (14)முசுகுந்தன், (15)கோமனு, (16)சாகரன், (17)திருமால், (18)பிறம்மபதி (பிறகபதி) என்னும் 18 மன்னர்களும் போற்றிப் புகழ்ந்து பயன்படுத்திட்ட இருடிவேத புரம், அசுரவேத புரம், சாமவேத புரம், அதர்வானவேத புரம் எனும் நான்கு கோட்டை அருள் நகரங்களையும் விட அழகும், வளமும், வலிவும், பொற்கலசங்கள் மிகுதியும் உடைய ‘சமத்துவபுரம்’ என்ற கோட்டை நகரத்தை கங்கையாற்றின் நடுவில் புதிதாக உருவாக்கி அருட்பேரரசராக விளங்கினர்.

இருந்த போதிலும் சந்திர குலத்தைச் சார்ந்த கருவூரரின் குருகுலப் பரம்பரையில் தோன்றுததால் இவரால் பதினெண்சித்தர் பீடாதிபதியாக மாற முடியவில்லை. இந்த ஒரு குறைதான் இவருக்கு இருந்தது. இதுவும் மறையும் வண்ணம் குரு பாரம்பரியத்தில் இவருக்கு நிலைத்த புகழ் கிடைத்து விட்டது. அதாவது, திரேதகா யுகத்து நாயகர்களான இராவணன், கும்பகர்ணன், மேகநாதன், வாலி, சனகன், எண்கோணமேனியான், சீதை, வண்டமர்குழலி, கைகேயி, தசரதன், இராமன், இலவ குசர்கள், விசுவாமித்திரர், வசிட்டர், பரசுராமர், பதினெட்டு வால்மீகிகள், பதினெட்டுக் கம்பர்கள், … முதலிய அனைவரையும் விடச் சிறந்த ஈடு இணையற்ற தனிப்புகழ் பெற்றிட்டார் இந்த யக்ஞவல்லி.

இவருடைய சாதனைகளால் இவருக்குக் கிடைத்த இந்தப் புகழை விட இவர் எழுதி வைத்துச் சென்றுள்ள குறிப்புக்கள் பயன்மிக்க இறவாப் புகழ் பெற்றதன் மூலம் இவருக்குக் கிடைத்திட்ட புகழ்தான் நிலையான புகழ், பெரும் புகழ். அதுவும் இவர் தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்புக்களைக் கடந்து; தான் படித்தவைகளையும்,

தான் பழகியவர்களையும், தான் சாதித்தவைகளையும் கூட்டலோ குறைத்தலோ இல்லாமல் அப்படியே மெய்யான வடிவில் வழங்கியுள்ளார். இதற்காக இவரை குரு பாரம்பரியம் மிகவும் பாராட்டுகிறது. இவரைப் பற்றிய செய்திகள் அரச பாரம்பரியத்திலும், இலக்கிய பாரம்பரியத்திலும் மிகுதியாக உள்ளன. அதாவது, பதினெண்சித்தர் பீடாதிபதிகளுக்குச் சமமாக இவர் குரு பாரம்பரியத்திலும், இலக்கிய பாரம்பரியத்திலும், அரச பாரம்பரியத்திலும் இடம் பெறுகிறார். இதுதான், இவருடைய சிறப்பு. எனவே, இவருடைய குறிப்புக்களையே **'சித்தர் இராமாயணம்'** என்று உரைப்பது முற்றிலும் தகும்.

**யக்ஞவல்லியின் குறிப்புக்கள்தான் உண்மை வரலாறு கூறும் சித்தர் இராமாயணம்.**

7) வண்டமர்குழலி தன் நாட்டிற்குப் படையெடுத்து வந்திருந்த இராமன் தன்னுடைய நாட்டிற்கோ அல்லது தன்னைப் போன்ற சேர, சோழ, பாண்டிய மன்னர்களுக்கோ வேண்டுகோள் விடுத்து நால்வகைப் படைகளைப் பெற்றுப் போர் புரியாமல்; குரங்குகளைப் படையாகத் திரட்டிக் கொண்டு வந்து முறையற்ற முறையில் போர் புரிவதாகவும்; கையிலே ஆயுதங்களே இல்லாமல் இருந்த கும்பகர்ணனை நீதியற்ற முறையில் கொன்றும் சூழ்ச்சியாகப் போர் புரிகிறான் என்றும் புகார் செய்து யோகீசுவரரான யக்ஞவல்லிக்கு ஓலை அனுப்பியிருந்தாள். அதன் பேரிலேயே, யக்ஞவல்லி இலங்கைக்கு வந்தார். ஆனால், அவர் வருவதற்கு முன்னமே இராமன் இராவணனைச் சூழ்ச்சியாகக் கொன்று விட்டான். அதாவது, வாட்போரில் வல்லவனான இராவணனைச் சூழ்ச்சியாக வில்போரினால் கொன்றுவிடுகிறான் இராமன். அந்தச் சோக நிகழ்ச்சியைத் தாங்கமுடியாத, சொல்லமுடியாத வேதனையோடு பல குறிப்புக்களால் விளக்குகிறார் யக்ஞவல்லி. அவற்றில் சில குறிப்புக்கள் இங்கு வால்மீகி, துளசிதாசர், போதாயனர்,

நாரதர் முதலியோரின் இராமாயணச் செய்திகளுக்கு மறுப்பாக இங்கு வழங்கப்படுகின்றன.

(அ) இராவணன் சூழ்ச்சியாக இராமனுல் வீழ்த்தப்பட்ட உடனேயே வீடணன்தான் மிகப் பெரிய மகிழ்ச்சி ஆரவாரம் செய்கிருன். ஆனுல், அவன் உடனடியாக இராமனிடம் ஓடிச் சென்று தனது அண்ணன் மனைவி கற்புக்கரசி வண்டமர்குழலி விரைவில் போர்க்களத்திற்கு ஓடிவருவாள். ஆதலால், இராமன் எங்காவது ஓடி ஒளிந்து கொள்ள வேண்டும் என்று கூறுகிருன். வீடணன் பச்சையாகவே, "யாராலும் வெல்லப்பட முடியாத தன் அண்ணன் இராவணன் இராமனின் முறையற்ற போரால்தான் கொல்லப்பட்டான் என்பதால் கற்புக்கரசி வண்டமர்குழலியின் சாபம் ஏழு பிறப்புக்களுக்கு தொடரும். அவளுடைய கோபத் தீயால் இராமன் உடனே சுட்டெரிக்கப்பட்டு விடுவான்" என்று கூறுகிருன். இராமனும், பெருவீரனை இராவணனின் அருகில் மண்டியிட்டு வணங்கி மன்னிப்புக் கேட்டு வாழ்த்தையும்; அறிவுரைகளையும், அருளுலக நியதிகளையும் தெரிந்து கொள்கிருன்.

ஆனுல், நீதியின் வடிவமாகவும், வீரத்தின் தெய்வமாகவும், அன்பின் உருவமாகவும் வாழ்ந்த இராவணன் மிகுந்த பரிவுடன், "இராமா! என் மனைவி தேவி வண்டமர்குழலி வருவதற்கு முன் நீ போர்க்களத்தை விட்டே ஓடி எங்காவது ஒளிந்து கொள்; நீ என்னை காலை நேரப் போரிலேயே சூழ்ச்சியாக வீழ்த்தி விட்டாய். ஆனுல், என் மனைவி யாராலும் என்னைக் கொல்ல முடியாது என்ற நம்பிக்கையில் சிவபூசையில் ஈடுபட்டிருக்கிருள். அவள் சிவபூசையை முடிக்கும் நேரம் வந்துவிட்டது. அவள் கண் திறக்கும் போது நான் வீழ்ந்து விட்டேன் என்ற செய்திக்குரிய அறிகுறிகள் தெரிந்து விடும் அவளுக்கு. அதனுல், அவள் கோபமாக வரும்போது உன்னைப் பார்த்தாள் என்ருல் அவள் கண் பார்வை பட்டே பொசுங்கிப் போவீர்கள் நீயும் உன் படையும். எனவே, அவளுடைய <u>கோபத்திலிருந்து</u> தப்பித்துக் கொள்.

“ஆனால் பத்தினியான அவள் சாபத்திலிருந்து நீயோ, உன் மனைவியோ, உன் தம்பிகளோ, உன் படையினரோ தப்புவதென்பது முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது! அடுத்த பிறப்பில் நீ யாராகப் பிறந்தாலும் சரி, எந்த யுகத்திலும் பிறந்தாலும் சரி அற்பமானவனின் அம்புக்கு இரையாவாய்; உன்னைச் சார்ந்தவர்களும் அற்பமான சண்டை சச்சரவுகளிலேதான் மாண்டு போவார்கள் என்ற சாபத்தைத்தான் என் மனைவி உனக்கும், உன்னைச் சேர்ந்தவர்களுக்கும் வழங்குவாள். நீ பேடி போல் மறைந்திருந்து வாலியைக் கொன்றதைவிட; ஆயுதமே கையில் இல்லாமல் இரண்டு கைகளிலும் சுக்கிரீவனைத் தூக்கிக் கொண்டு கோட்டைக்குத் திரும்பிய கும்பகர்ணனை முன்னிரவின் இருளில் மறைந்திருந்து அம்பெய்திக் கொன்றதை விட; நீதியற்ற முறையில், நேர்மையற்ற முறையில் பேடித்தனமாக, சூழ்ச்சியாக அம்பெய்தி வீழ்த்தி விட்டாய் என்னை. எனவே, என் மனைவியின் கோபத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் தப்பவே முடியாது நீ. அதனால் விரைவில் ஓடி ஒளிந்து கொள்.

“என் தம்பி வீடணனையும் அவள் முன்னால் அனுப்பாதே. என் குருதேவர் யக்ஞவல்லியை வரவழைத்து எனக்கு ஈமக்கிரியை செய்து விடு. அறவோனாகிய உன் தந்தைக்கும் அவரை வைத்தே ஈமக்கிரியை செய்துவிடு. அனேகமாக என்னைக் கொன்றதினால் பெரும்புகழ் பெற்ற உனக்குக் கூட அவரை வைத்தே ஈமக்கிரியை செய்யும்படி ஏற்பாடு செய்துவிடு. நீதியற்ற, நேர்மையற்ற, உண்மையற்ற உன்னை யாருமே மன்னிக்க மாட்டார்கள். இதோ கோட்டையின் காண்டாமணி ஒலிக்கிறது. நான் வீழ்த்தப்பட்ட செய்தி கேட்ட என் மனைவி பூசையறையிலிருந்து புறப்பட்டு விட்டாள். அவள் வரும்போது நான் உயிரோடு இருந்தால் யாராலும் வெல்லப்பட முடியாத என் வீரத்தை பேடியான உனது சூழ்ச்சி எப்படி வென்றது என்ற உண்மையெல்லாம் அவளுக்குக் கூற வேண்டியிருக்கும். அதனால், உன்னுடைய சூரிய குலத்திற்கே இழிவும்,

பழியும் வரும். எனவே, நான் என் உடலை விடுத்து வெளிப் புறப்படப் போகிறேன். அதன் பிறகு நீ இந்த இலங்கை மண்ணில் பூசை கூடச் செய்ய முடியாது, செய்ய வேண்டாம். எனவே, நீ விரைவில் இலங்கையை விட்டு திரும்பிப் பாராமல், மறுகரைக்குச் சென்றதும், சிவபத்தனான என்னைக் கொன்ற பாவத்திற்கு இந்தக் கடலின் மண்ணிலேயே சிவலிங்கம் செய்து சிவபூசை செய்து பாவமன்னிப்பு பெற்றுச் செல். உன் வாக்குறுதிப்படி என் தம்பிக்கு இலங்கை அரசனாக முடிசூட்டு. ஆனால், நீதி தேவதை வாழும் இலங்கை மாநகருக்குள் மட்டும் நீ போய் விடாதே. பிறகு உன்னை யாராலும் காப்பாற்ற முடியாது. இலங்கையின் புனித மண்ணை உன்னால் மிதித்து மீள முடியாது. நீ விரைவில் போய்விடு. நான் நிறைவு பெறப் போகிறேன்...” என்று இராவணன் கூறியதை இராமன் தன்னிடம் கூறியபடியே எழுதியிருப்பதாக யக்ஞவல்லி குறிப்பிடுகிறார்.

(ஆ) இராமன் மனம் வருந்திக் கூறியதாக; “..... இலக்குவன் அவசரப்பட்டுப் பெண் என்றும் பாராமல் சூர்ப்பனகையின் மூக்கை அறுத்தான். அதனால்தான், சீதையை இழந்து துன்புற நேரிட்டது. இலக்குவன் கும்பகர்ணனுடன் போரிட்டுத் தோற்ற செய்தியை உடனே தெரிவிக்காமல் மூடி மறைத்ததினால்தான் கடைசி நேரத்தில் கோட்டைக்குத் திரும்பிக் கொண்டிருந்த கும்பகர்ணனை இருட்டில் துரத்திச் சென்று கொல்ல நேரிட்டது. இலக்குவன் மேகநாதனை எப்படியாவது குறுக்கு வழியில் சூழ்ச்சியாகக் கொன்று தன்னுடைய வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று நினைத்ததால்தான் குகைக்குள் ஆழ்ந்த பூசையில் ஈடுபட்டிருந்த மேகநாதனை முதுகில் அம்பு போட்டுக் கொன்றதையும் ஏற்க நேரிட்டது. இலக்குவன் இராவணனிடம் தூது போக அஞ்சியதால்தான் சரியாகப் பேச வராத குரங்கான அங்கதனை இராவணனிடம் தூதராக அனுப்பி இராவணனுடன் சமாதானம் செய்ய மேற்கொண்ட முயற்சி தோற்றது. அதாவது, போர்முறைப்படி இராவணன் தன் தங்கையை

மானபங்கப்படுத்திய எங்களைப் போருக்கு அழைப்பதற்காகத்தான் சீதையைச் சிறையெடுத்தான். அவனிடம் அவன் தங்கை சூர்ப்பனகையின் அறிவுகெட்ட செயலையும், இலக்குவனின் அவசரமான கோபச் செயலையும் விளக்கியுரைத்துச் சமாதானம் பேசியிருந்தால் வண்டமர்குழலியின் கோபத்திற்கும், சாபத்திற்கும் உள்ளாக நேரிட்டிருக்காது. அநியாயமாக இராவணனைக் கொல்லவும் நேரிட்டிருக்காது. இலக்குவனின் வறட்டுப் பிடிவாதமும், வீடணனின் திட்டமிட்ட சதியும்தான் இராவணனுடன் சமாதானம் ஏற்படாமல் செய்துவிட்டன.”

“இராவணனுடன் போர் செய்வதற்காகப் பரதனுக்குச் சொல்லியனுப்பிப் படைகளை வரவழைக்கலாம் என்ற கருத்தையும்; சேர, சோழ, பாண்டிய மன்னர்களிடம் உதவி கேட்டுப் படைகளைப் பெற்று இராவணனுடன் போரிடலாம் என்ற கருத்தையும் இலக்குவன் மறுத்தான் என்பதால்தான் இராவணனுடன் செய்த மாபெரும் போர் குரங்குகளின் போராக முடிந்துவிட்டது. இது சூரியகுலத்துப் பெருமையையே குலைப்பதாயிற்று. அதாவது, இராம இராவணப் போர் குரங்குகளின் போர் என்றும்; இராமனின் வெற்றி குரங்குகளின் வெற்றியென்றும் உலகோர் பேசுவதற்கு இடமுண்டாகி விட்டது. என்றால் இலக்குவனைக் கண்டிக்கவே முடியவில்லை. இராவணனோடு சமாதானம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் வீடணனும் இலக்குவனும் போட்டி போட்டுக் கொண்டு செயல்பட்டார்கள். அதனால்தான், என்னையும் மீறி கும்பகர்ண வதை, மேகநாதன் கொலை, இராவணன் கொலை, சூர்ப்பனகை மானபங்கம் முதலியன நிகழ்ந்து விட்டன. இந்தக் குறைகளுக்கும், கறைகளுக்கும் எத்தனையெத்தனை சிவாலயங்களைக் கட்டினாலும், சிவபூசைகளைச் செய்தாலும் பரிகாரங்களைச் செய்ய முடியாது.

“இவற்றிற்கெல்லாம் மேலாக, இராவணனின் மனைவி வண்டமர்குழலி என்னென்ன சாபங்களைக் கொடுத்தாள் என்பதையும், எப்படியெப்படி வயிறெரிந்து திட்டினாள் என்பதையும் முழுமையாகத் தெரிந்து

கொள்ளவே முடியவில்லை. குருதேவர் உட்பட எல்லோருமே அச்சுறுத்துகிறார்கள்: வண்டமர்குழலியின் சாபத்தால் எப்பிறப்பிலுமே எனக்கு வீரமரணம் கிடையாது, நிம்மதி கிடையாது, நிறைவு கிடையாது, மன அமைதி கிடையாது என்று... இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும் போது இந்த அரக்கப் போரே செய்திருக்கக் கூடாது என்றுதான் தோன்றுகிறது. சீதை இப்போது நெருப்புக் குளிக்க நேரிட்டது போலல்லாமல் அசோகவனத்திலேயே இராவணன் முன்னிலையிலேயே அவள் நெருப்புக் குளித்து மீண்டிருக்கலாம் என்று விட்டிருக்க வேண்டும். சீதையை மீட்டு வர விசுவாமித்திரரையோ, வசிட்டரையோ, குருதேவரையோ உதவி செய்யுமாறு கேட்டிருக்கலாம். அனாவசியமாக இப்படிப் பெரும் பழிக்கும், சாபத்துக்கும், கோபத்துக்கும் உள்ளாக்கியிருக்கத் தேவையில்லை. போர்க்களத்தில் மாண்ட இராவணனும் வண்டமர்குழலியும் அமரர்களாகி விட்டார்கள். இனியென் கதி என்னவோ? என் விதி என்னவோ!?!?!? .......” என்று இராமன் இராவணனைக் கொன்றதிலிருந்து கடைசியில் சரயு நதியில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளும் வரை அழுது புலம்பி அரற்றிக் கொண்டேயிருந்தான் -- என்ற இக்கருத்துக்களை யக்ஞவல்லி இராமன் உயிரோடு இருக்கும் போதே குறித்து வைத்திருக்கிறார்.

இராம இலக்குவனர்களின் பிணம் சரயு நதியில் எவ்வளவோ தேடியும் கிடைக்காமல் போன பிறகு, இலவ குசர்களை வைத்து சரயு ஆற்றங்கரையில் ஈமக் கடன்களைச் செய்த போதும், அதற்குப் பிறகும், மேற்படி இராமனின் புலம்பல்களை மிகத் தெளிவாகக் குறிக்கின்றார்.

(இ) சூரியகுலத்தின் பெருமைகளையும், உரிமைகளையும், நாயகர்களையும் மிகுதியாகப் பெற்ற ஒரு யுகம்தான் இராமன் வாழ்ந்த அல்லது இராமாயணம் நடந்த திரேதகா யுகம். மற்றபடி முதல் யுகமான கிரேதகா யுகம் சந்திர குலத்துக்குரிய சிவன், முருகன், கருவூரார் முதலியவர்களை விளக்குவதாகவும்; மூன்றாவது

யுகமான துவாபர யுகம் சந்திர குலத்துக்குரிய கருவூரரின் குருகுலத்தார் வரலாற்றைக் கூறுவதாகவே அமைகிறது. நான்காவது யுகமான கலி யுகத்தில் 39 (முப்பத்தொன்பது) பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றப் போகிறார்கள் என்ற ஒரே சிறப்புத்தான் உண்டு. இந்தப் பீடாதிபதிகள் சந்திர குலத்துக்குரிய கருவூரரின் கருவழி வாரிசுகளேயாவார்கள். எனவே, இந்த நான்காவது யுகமும், முதல் யுகத்தையும் மூன்றாவது யுகத்தையும் போல் சந்திர குலத்தின் பெருமையைக் கூறுவதாகத்தான் அமைகிறது.

இப்பேருண்மைகளை யெல்லாம், முக்காலத்தையும் உணரும் அருளாற்றல் படைத்த யக்ஞவல்லி மிகமிகத் தெளிவாக உணர்ந்திருந்த காரணத்தினால்தான் சூரியகுலத்தின் பெருமை நிலைக்கும் வண்ணம் தனது யுகத்தின் செய்திகளை மிகமிக விரிவாக முறையாகத் தொகுத்துச் சுவைமிக்க காப்பியங்களையும், புராணங்களையும், இதிகாசங்களையும், கதைகளையும், கவிதைகளையும், கீதைகளையும் 27 (இருபத்தேழு) வண்ண இலக்கியங்களாக வடிவெடுக்கச் செய்தார். இதற்கு எழுத்தாற்றல் மிக்க பதினெட்டு வால்மீகிகளையும், பதினெட்டுக் கம்பர்களையும் ஆணையிட்டு இலக்கியங்கள் படைக்கச் செய்தார். இவர்களல்லாமல், அவருக்குக் கிடைத்த வியாசர்கள், நாரதர்கள், போதாயனர்கள், வேதாயனர்கள், ஓதாயனர்கள் ... முதலியவர்களை யெல்லாம் சூரியகுலப் பெருமை கூறும் இலக்கியங்களைப் படைக்கச் செய்தார்.

இருந்த போதிலும், இவர், வண்டமர்குழலி சூரியகுலக் காப்பிய நாயகனான இராமனைப் பற்றிக் கூறிய பல செய்திகளை அவர்களின் ஈமக் கடன்களைப் பற்றி விவரிக்கும் போதும், தசரதனின் ஈமக் கடன்களின் போதும், இராமனின் ஈமக் கடன்களின் போதும், சனகனிடம் இராம இராவணப் போரை பற்றிப் பேசும் போதும் தாராளமாகப் பச்சையாகவும், கொச்சையாகவும் பல செய்திகளைக் குறிப்புக்களாகத் தருகிறார். அவற்றுள் சில:

# இராவணன் ஆற்றி வண்டமர்குழலியின் இறுதி வாசகங்கள்.

(a) '.... பிறந்தது முதலே இராமன் எதையும் யோசிக்காமல் சிறுபிள்ளைத்தனமாகத் தன் விருப்பம் போல் செயல்பட்டுப் பழகியவன். தசரதனின் பாச உணர்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டு பரதனுக்குரிய நாட்டை அவனில்லாத போது முடிசூட்டிக் கொண்டு உரிமை பாராட்ட ஆசைப்பட்டான். இதைப் போலவே, இலங்கை யுத்தத்தில் சிறுபிள்ளைத்தனமாகவும், தான்தோன்றித்தனமாகவும் முறையற்றுச் செயல்பட்டு விட்டான். இதனை ஊகித்துணர்ந்து எத்தனையோ முறை எடுத்துக் கூறியும் எச்சரிக்கையாகச் செயல்படாமல் போய்விட்டார் தன் கணவர்' என்றும்;

(b) 'வாலியை விட்டுச் சுக்கிரீவனை மட்டும் தனித்துப் பிரித்து அண்ணனுக்குரிய நாட்டைத் தம்பிக்கு முடிசூட்டித் தருவதாக வாக்களித்துத் தனக்குப் பக்கபலம் தேடிக் கொண்ட முறைகேடனன இராமன், தன்னுடைய கணவன் இலங்கையை ஆண்டு கொண்டிருக்கும் பொழுதே தன் கணவனின் தம்பி வீடணனை அழைத்து இலங்கையரசிற்கு முடிசூட்டி அண்ணன் தம்பியைப் பிரித்துத் தனக்கு வலிமையூட்டிக் கொண்டான். இப்படிப்பட்ட முறைகேடனை எதிர்க்க மிகுந்த எச்சரிக்கை தேவை என்று எத்தனையோ முறை கூறியும் தன்னுடைய கணவர் எச்சரிக்கை அடையத் தவறிவிட்டார்' என்றும்;

(c) '16 வயதுப் பாலகனன இராமன் 32 வயது சீதையால், காமக் களியாட்ட விளையாட்டுப் பொருளாகத்தான் பயன்படுத்தப் பட்டான் என்பதால் இராமனுக்கு நீதியுணர்வோ, நேர்மையுணர்வோ, மனச்சாட்சியோ, அறச்சிந்தையோ, அருள்நெஞ்சமோ இருக்காது என்பதால் அவனோடு போராட்டமோ போரோ தேவையில்லை; அவனைச் சிறுபிள்ளையாக நினைத்து மன்னித்து விடலாம் என்று

சூர்ப்பனகையின் தகராறின் போதே தான் கூறியதைத் தன் கணவர் கேட்கவில்லை' என்றும்;

(d) 'போர்க்களத்தில் மிகப் பெரிய வெற்றியைப் பெற்ற தன் கணவரின் தம்பி கும்பகர்ணன் (கும்பகன்னன்) தனது வெற்றியின் அடையாளமாக சுக்கிரீவனைக் கட்டிப் பிடித்து இருகைகளிலும் தூக்கிக் கொண்டு முன்னிரவின் இருளில் இலங்கை நகருக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது, கோட்டை மதிலின் நிழலிருட்டில் ஒளிந்திருந்து முகமெங்கும் அம்புகளை விட்டு அநீதியாக, அநியாயமாக, முறைகேடாகக் கொலை செய்த நேர்மையற்ற தசரதன் மகனோடு போர்புரிவதில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று எத்தனையோ முறை தான் எடுத்துக் கூறியதைக் கேட்கத் தவறிவிட்டார் தன் கணவர்' என்றும்;

(e) 'மேகநாதன் பூசை செய்து கொண்டிருக்கின்றான் என்று கூட எண்ணாமல் அவன் பின்னாலிருந்து முதுகில் அம்பெய்திக் கொன்ற இழிசெயல் புரிந்த இலக்குவனின் அண்ணன்தான் இராமன் என்பதால் அவனோடு போர் புரிவதில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று எத்தனையோ முறை தான் எடுத்துக் கூறியதைக் கேட்கத் தவறிவிட்டார் தன் கணவர்' என்றும்;

(f) 'நமது படையின் வலிமையையெல்லாம் தெரிந்த வீடணனின் துணையோடு இராமன் படையெடுத்திருக்கிறான். அதனால் படைகளை அனுப்புவதிலும், படைத்தளபதிகளைத் தேர்ந்தெடுப்பதிலும், போர்முறையிலும் மிகுந்த கவனம் செலுத்த வேண்டுமென்று எத்தனையோ முறை தான் எடுத்துக் கூறியதைத் தன் கணவர் கேட்க வில்லை' என்றும்;

(g) 'சீதையின் மீது எள்முனையளவு கூட ஆசையில்லாத தன் கணவன் இராவணன், இராமனால் சந்தேகிக்கப்படுவதால், அந்த இராமன் எப்படியும் தன் கணவனைக் கொலை செய்யத்தான் முயலுவான் என்பதால் அவனோடு போர்புரியும் போது மிகமிக எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என்று எண்ணற்ற முறைகள் தான் வேண்டிக்

கொண்டும் தன் கணவன் எச்சரிக்கையாக இல்லாமல் போய்விட்டான்’ என்றும்;

(h) ‘தன்னுடைய தெய்வீகக் கற்புக்குரிய இராவணன் மூவுலகையும் வென்று மன்னர் மன்னனுக விளங்கிய போதும் சாதாரண மானுடனின் முறையற்ற போரால்தான் மாண்டுபோக நேர்ந்தது’ என்றும்;

(i) ‘தன்னுடைய கணவன் மிகச் சிறந்த அரிய பெரிய நீதிவான் எனத் தெரிந்திருந்தும் இராமன் யாரேனும் ஒரு மானுடனே அனுப்பித் தூது பேசிச் சீதையைப் பெற்றுச் சென்றிருக்கலாம். ஆனுல், அவன் ஏதேனும் ஒரு காரணத்தை வைத்து அரக்கர் கோனேயும், அரக்கர் குலத்தையும் அழிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டதால்தான் தன்னேயும் தன் தம்பியையும் தவிர வேறு எந்த ஒரு மானுடனும் இல்லாத ஒரு குரங்குப் படையை திரட்டிக் கொண்டு வந்து அரக்கர் கோனேயும், அரக்கர் சேனேயையும், அரக்கர் நாட்டையும் சிதைத்துச் சீரழித்து விட்டான்’ என்றும்;

(j) ‘தேரேறி இறுதிப் போருக்கு அன்று காலே புறப்படும் போதுதான் நெடுநாளாகத் தான் மட்டும் அறிந்திருந்த இரகசியத்தை அவனும் அறிந்திருந்தான் என்பது தெரிந்திருந்தது. சனகன் மகள் சீதையின் சுயம்வரப் போட்டிக்குச் சென்ற தன் கணவனிடத்தில் குருதேவர் யக்ஞவல்லி, “சனகன் வைத்திருக்கும் வில்லே நாணேற்றுவதோ முறிப்பதோ சாதாரணம், ஆனுல் நீ சீதையை மணக்க முடியுமா? என்பதை சீதையை ஒருமுறை உற்றுப் பார்த்து முடிவு செய்து விட்டு அதன் பிறகே போட்டியில் பங்கு பெற்றிடு. ...” என்று கூறியிருந்ததால்தான்; மிதிலே சென்ற தன் கணவன் <u>சனகன் வைத்திருந்த வில்லேத் தொடுவதற்கு முன்னுல் அவனுடைய வளர்ப்பு மகள் சீதையை உற்றுப் பார்த்து அவள் தானீன்ற மகள் என்பதை உணர்ந்து</u>தான் தீயை மிதித்தது போல் வில்லேத் தொட்டும் தொடாமலும் இலங்கைக்குத் திரும்பி விட்டான். ஐந்திறத்தார்கள், அரக்கர்கோன் அழியப் பிறந்த அந்த மகளே அரச குலத்தவர்கள் மணந்தாவது புதிய மாற்றம் உண்டாகட்டும் என்றெண்ணியே வாய்மூடி

மௌனியாக இருந்தார்கள். ஆனால் ஊழ்வினையும், விதியும் அரக்கர்கோன் மகளை இலங்கைக்கே கொண்டு வந்து அனைவரையும் அழித்து விட்டது' என்றும்;

(k) 'தானீன்ற மகளை நான் பார்த்துவிட்டால் தன் மருமகன் தசரதன் மகனை இலங்கைக்கு வரவழைத்துப் பெருமைப்படுத்தும் திட்டம் நிறைவேறாமல் போய்விடும் என்றெண்ணியே தன் கணவன் தன் மகளை சிறையெடுத்து வந்து தனியாக அசோகவனத்தில் சிறை வைத்தான். "அரக்கர் மகளொருத்தியால் அழிய நேரிடும் அரக்கர் கோன் வாழ்வும், ஆட்சியும், குடும்பமும்" என்று நிமித்திகரும், ஐந்திறத்தாரும் கூறியதற்கேற்ப ஒருவேளை தன் தங்கை சூர்ப்பனகையாலே அந்த அழிவு வந்திடுமோ என்றஞ்சினார். அவர் நெருப்பில் விழுந்த புழுவாய் இருமனத்தோடு போராடினார். தன் அழிவும், குடும்ப அழிவும் தானீன்ற மகள் சீதையால் விளைந்திடுமோ? அல்லது உடன்பிறந்தவள் சூர்ப்பனகையால் விளைந்திடுமோ? என்ற கவலைத் தீயாலேயே வெந்தார்...' என்றும்;

(l) '<u>அரக்கர் மகளொருத்தியால் அழியும் அரக்கர் கோன் வாழ்வு</u> என்ற கணிப்பால்தான் அரக்கர் கோன் தன் தங்கையின் மானபங்கக் கோபத்தை அடக்கவும், தன் மருமகன் இராமனை இலங்கைக்கு வரவழைத்து உறவுமுறைகளை வெளிப்படுத்தி சமாதானத்தையும், நிலையான ஒட்டுறவையும் உருவாக்க நினைத்தான் தன் கணவன்' என்றும்;

(m) 'தானீன்ற மூத்த மகள் சீதை வாய்விட்டழுது இலங்கையர்கோனும் இறந்து, இலங்கையும் அழிவதைத் தடுக்கவே; ஈன்ற குழந்தையை, முதல் மகளை, மூத்த மகளை சரியாகக் கூட முகத்தைப் பார்க்காமல், ஒருமுறை கூடப் பாலூட்டாமல் பெட்டியில் வைத்து விட்டதால்தான் சீதைக்குத் தாய்ப்பாசமே இல்லாமல் போய்விட்டது. ஆனால், தன் கணவன் திருக்கரத்தால் தூக்கிக் கண்ணீரால் நீராட்டி கண்குளிரக் கண்டு முத்தமிழ்தம் பெய்து தந்தப் பெட்டியில் வைத்து விட்டதால்தான் தந்தையைக் கண்டதும்

பாசத்தால் பஞ்சவடியிலிருந்து தன் கணவனை விட்டுத் தானே தேரேறி வந்தாள்; வந்தவளே தீயாகி அரக்கர் கோனையும், இலங்கையையும் தீய்த்து விட்டாள். அந்தச் சீதையை சொந்த மகள் என்று கூறுமலேயே மாள விரும்புகின்றேன் இந்த வண்டமர்குழலி. வாழ்விழந்த என்னைத் தன்னுடைய ஈன்றெடுத்த தாயென்றும் அறியத் தேவையில்லை அந்தச் சீதை' என்றும்;

(n) 'சூர்ப்பனகை எப்போதுமே எங்கள் மீது குறை காண்பவள் என்பதாலேயே என் கணவர் தன் மகளின் கணவனும், கொழுந்தனுமே சூர்ப்பனகையை மானபங்கப் படுத்தினுர்கள் என்ற உண்மையை மூடிமறைத்து, தங்கை சூர்ப்பனகையால் அழிவதற்குப் பதிலாகத் தானீன்ற மகள் சீதையாலேயே அழிந்தார்' என்றும்;

(o) 'தன் மருமகன் இராமனை வியப்பூட்டி, மகிழ்வூட்டி, விருந்தூட்டி மகிழவே தன் மகள் சீதையைத் தேரேற்றிக் கொணர்ந்த தன் கணவரின் விளையாட்டு வினையாயிற்றே' என்றும்;

(p) 'தன் மகள் சீதையை இலங்கைக்குக் கொண்டு வந்த நாள் முதல் அரக்கர் மகளே சீதை என்பதை யாரும் அறிந்திடாதிருக்க அசோகவனத்தில் சிறை வைத்தும் பயனே இல்லாமல் போய்விட்டதே. குருதேவர் ஆணை இல்லாதிருந்தால் நானும் என் கணவரும் எங்களது மூத்த மகளை இலங்கைக்குப் பேரரசியாக முடிசூட்டியிருப்போமே' என்றும்;

(q) 'நானீன்ற மகள் சீதையே என் தாலியறுபட, குங்குமம் கலைய, பூச்சரம் பறிக்கப்படக் காரணமாகி விட்டாளே. அவளாவது நல்லபடியாக வாழ முடியுமா? நான் இறந்த கணவனுக்காகப் புலம்புகிறேன். அவள் இருக்கின்ற கணவருக்காகப் புலம்பட்டும். என் ஈமத்தீயிலே அவள் இறங்கி நடக்கட்டும். எங்களின் பாசமகளை தீ சுடாமல் இருக்கட்டும்' என்றும்;

(r) 'அரக்கர் கோன் மகளை மணந்த இராமன் சேரன்மலையில் அப்பாவி மூதாட்டி சபரி எரிந்து சாம்பலாவதற்குக் காரணமாய்

இருந்தது போல் இலங்கைக்கு வந்து அரக்ககுல மகளிர் கணக்கற்று தீப்பாய்ந்து சாம்பலாவதற்குக் காரணமாகி விட்டானே. இந்த ஈமத்தீ கூட அவனுக்குக் கிடைக்காமல் போகட்டும். குருதேவரே, எங்கள் மகள் எங்கள் குலத்தாரையே மணந்து எங்களுக்கு இப்படியொரு அழிவு வந்திருந்தால் கூட அது, மானுடரால் அரக்கர் குலம் அழிந்தது என்ற இழிவைத் தந்திருக்காதே' என்றும்;

(s) 'குருதேவரே, எங்களுக்கு எள்ளும் தண்ணீரும் இரைத்து ஈமக் கடன் செய்வது போல்; எனது மகளுக்கும் மருமகனுக்கும் எப்படியாவது ஈமக் கடன்கள் செய்து இப்பிறப்பில் ஈடேற்றுங்கள். என் கோபம் கொடிது, சாபம் கொடிது, என் செய்வேன்?' என்றும்;

(t) 'என் கணவர் காலையில்தானே நான் என் மகள் சீதையைப் பார்த்தால் இறந்த மகன்களால் வந்த துன்பத்தையும் மறப்பேன் என்று கூறி மருமகன் இராமனை சிறை பிடித்துக் கொணர்வதாக வேடிக்கை பேசிச் சென்றாரே, எல்லாம் வேதனையாகி விட்டதே. குருதேவரே, மாமனுக்கும் மருமகனுக்கும், தாய்க்கும் மகளுக்கும் நல்லுறவை உருவாக்கித் தர உங்களை வரவழைத்திருப்பதாகக் கூறினாரே, நீங்கள் வந்து சேரும் முன்னரே வானுலகம் சென்று விட்டாரே' என்றும்;

(u) 'வானர அனுமன் இலங்கைக்கு வந்ததுமே என்னைக் கண்டு இராமன் கூறிய சீதை நானே என்று மயங்கினான். இந்த செய்தி கேட்டபோதே "என் மகளே சீதை" என்று உணரத் தவறி விட்டேனே' என்றும்;

(v) 'வானர அனுமன் அசோகவனத்துச் சீதையின் வடிவம், அரண்மனையில் கண்ட வண்டமர்குழலியின் மாற்று வடிவமோ!; அழுகைக் கோலம் பூண்டு நடிக்கும் அரக்கர் கோமகள் சூதோ! என்று ஐயுற்ற சேதி கேட்டபோதே சனகன் வளர்ப்பு மகள் சீதை என் வயிற்றில் பிறந்த மகள்தான் என்பதையறிய முடியாமல் போய்விட்டேனே' என்றும்;

(w) ‘என் கணவர் சம்பந்தி தசரதனின் ஈமக் கடனுக்கு மகன்களோடும், மகளோடும் கூடிச் செல்ல வேண்டும் என்று கூறியிருந்தாரே! இப்பொழுது சம்பந்தி வீட்டார் யாருமே இல்லாமல் எங்களுடைய ஈமக் கடன்கள் நடக்கப் போகின்றதே’ என்றும்;

(x) ‘குருதேவரே, உங்களின் சூரியகுலம் என் மகள் வயிற்றில் பிறக்கப் போகும் வாரிசுகளால்தான் வலிமையும், வல்லமையும் பெற்றிட வேண்டுமென்று நீங்களே முடிவுகட்டி விட்டீர்களா? அரக்கர் குலமும், சூரியகுலமும் ஒன்ருகித்தான் இந்த யுகம் முடிய வேண்டுமா? சூரியகுலத்தில் காவிரிச் சோழர்குலத்துப் பெண்ணோ அல்லது சந்திரகுலத்து வைகைக்கரைப் பாண்டியனின் பெண்ணோ கங்கைக் கரைச் சூரியகுலத்திற்குக் கிடைக்குமாறு செய்திருக்கக் கூடாதா? எங்கள் மகள் பதினுன்கு ஆண்டு காலம் வனவாசம் முடித்தாலும் வாழ்வு பெற முடியுமா? அரக்கர் மகளே சீதை யென்பதை அறிந்தால் அயோத்தி இராமன் அவளோடு குடும்பம் நடத்துவானு?’ என்றும்;

(y) ‘தன் மகள் சீதைக்கு வனவாசத்தில் ஓய்வு தரவே அரக்கர்கோன் தன் மகளைத் தேரேற்றிக் கொணர்ந்தார். ஆனுல் விதியாக, ஊழாக அவளே மாறிவிட்டாள். இதைத் தடுத்திருக்கக் கூடாதா குருதேவரே? இதைத் தவிர்த்திருக்கக் கூடாதா குருதேவரே? முக்காலமும் உணர்ந்த குருதேவரே எங்களைக் காக்காமல் விட்டது ஏன்?’ என்றும்;

(z) ‘அரசகுலத்தையே வேரோடு அழிக்கிறேன் என்று புறப்பட்ட பரசுராமர் தசரதன் மகன் இராமன் திருமணம் செய்து கொண்டு திரும்புகின்ருன் என்றவுடனேயே அவன் அயோத்தி சென்று முடிசூட்டிக் கொள்ளும் முன் கொன்றுவிட வேண்டுமென்று ஓடினுர். ஆனுல் தசரதன் மகன் இராமன் ஓர் அரக்கர் குலப் பெண்ணை மணந்திருக்கிருர்; அதனுல் தோன்றப் போகும் வாரிசு அரசகுலமாக இருக்காது என்பதையுணர்ந்தே அவனைக் கொல்லாமல் விட்டு விட்டார். அரக்கர்கோன் மகளே சீதை என்பதைத் தன்னைக்

கண்டு அஞ்சாமல் ஏறிட்டு நோக்கிய சீதையின் பொலிவால் புரிந்திட்ட பரசுராமரே இலங்கையர்கோன் மருமகனுடன் வில்வித்தை விளையாட்டுக்களை வேடிக்கையாகச் செய்தார். அந்தச் செய்தி கேட்டும் நான் என் மகள்தான் சீதையென்பதைப் புரிந்து கொள்ளாமல் போய்விட்டேனே' என்றும்;

(a1) 'இலங்கையர்கோன் இறுதிப் போருக்கு முன்னாலாவது சீதையிடம் அவள் தன் மகள்தான் என்று கூறியிருக்கக் கூடாதா? அல்லது என்னிடமாவது உன் மகள்தான் சீதையென்பதைக் கூறியிருக்கக் கூடாதா? என் மகள் சீதையையே போர்முகத்திற்கு அனுப்பியிருப்பேனே, அவளே தசரதன் மகனிடம் அவனது முறையற்ற போர்களால் தன் தம்பிகளும், சின்னையாவும் (சித்தய்யா, சித்தப்பா.... என்ற பாடவேறுபாடுகள் உண்டு இந்தச் சின்னையா என்ற சொல்லுக்கு) மாண்டது போதுமென்று கூறித் தன் தந்தையையும் தாயையும் வந்து பார்க்குமாறு தன் கணவனை அழைத்து வந்திருப்பாளே! இலங்கையின் அரசையே இராமனுக்குச் சீதனமாகக் கொடுத்திருப்பாரே என் கணவர் இலங்கையர்கோன்' என்றும்;

(b1) 'குருதேவரே, என் கணவர் தன் மகன்கள் மாண்டபோது கூட மருமகனுக்கு அழிவு வந்து விடக் கூடாதே என்றெண்ணியே தம்பியை அனுப்பி மருமகனைத் தூக்கி வரச் சொன்னாரே! இன்று மருமகனாலேயே மாண்டு போனாரே' என்றும்;

(c1) 'குருதேவரே, மாண்டு கிடக்கும் எம் மன்னவனை, தென்னவர்கோனை, மா இலங்கை வேந்தனை நன்றாகப் பாருங்கள். இறப்பின் அச்சமோ, எதிரி மீது கோபமோ இல்லாமல் அன்றலர்ந்த தாமரைபோல் புன்னகை பூத்துக் கிடக்கின்றாரே! மானுடனால் தனக்கு மாய்வுண்டென்று எண்ணாமலும், மருமகனால் தனக்கு மாய்வு வந்து விடாது என்று எண்ணாமலும், மலர்ந்த முகத்தோடு விளையாட்டாகவே போர்புரிந்த மூவுலகும் வென்ற வேந்தனை, மூவரும் பிறரும் போர் புரிய அஞ்சும் அரக்கர்கோனை வினையாக, வினையமாக, சூழ்ச்சியாக, முறையற்ற போர் புரிந்து வீழ்த்தி விட்டானே தசரதன் மகன்.

ஐயோ! என் நாயகன் ஆருயிர் நிலையை அரக்கர் குலக் கோடாரி வீடணன் பேராசையால் விளம்பியதால்தானே தசரதன் மகன் வெற்றி பெற்றுனே! என் கணவர் வீழ்ந்து பட்டாரே' என்றும்;

(d1) 'குருதேவரே! நீங்களாவது என் மகள் சீதைக்கோ, மருமகன் இராமனுக்கோ எங்களுடைய உறவுநிலைகளை, உரிமைநிலைகளை புதிய பந்தபாசம் உருவாகும்படி விளக்கி விளம்பியிருக்கக் கூடாதா?' என்றும்;

(e1) 'குருதேவரே! வசிட்டருக்கும், விசுவாமித்திரருக்கும் உருவான போட்டாபோட்டிச் சண்டைச் சச்சரவுகள் அரிச்சந்திரனோடு நின்றிருக்கக் கூடாதா? வசிட்டர் குருவாக இருக்கும் சூரிய அரச குலத்தோடு மூவுலகமாளும் அரக்கர் கோனின் மகளை இணைத்து மாபெரும் நாடகமாடி அரக்கர் குல அழிவையும், அரச குலப் பழியையும், இழிவையும் உருவாக்கித்தான் விசுவாமித்திரர் நிறைவு காண வேண்டுமா? வசிட்டர் காத்த அரச குலத்தைப் பழிக்கும், இழிவுக்கும், நலிவுக்கும் உரியதாக்கித் தன்னுடைய வெற்றியை அரிச்சந்திரனையும் கடந்து அயோத்தித் தசரதன் மகன் வாழ்விலும் நிலைநாட்ட வேண்டுமா? தாங்கள் விரலசைத்திருந்தாலோ, கண்பார்வை காட்டியிருந்தாலோ இந்த விசுவாமித்திரர் தன்னுடைய விபரீத விளையாட்டை நிறுத்திக் கொண்டிருக்க மாட்டாரா? ஏன் எங்களைக் காக்கத் தவறி விட்டீர்கள் குருதேவரே?' என்றும்;

(f1) 'குருதேவரே! வசிட்டரை முழுமையாகத் தோற்கடிக்கவும், அரக்கர் குலத்தை முழுமையாக அழிக்கவும் திட்டமிட்ட விசுவாமித்திரன் அயோத்தித் தசரதனுக்கும் அறிவிக்காமல், மிதிலைச் சனகனுக்கும் புரிவிக்காமல், தசரதன் மகன் இராமனுக்கும் தெரிவிக்காமல் மூவுலகாளும் இலங்கையர் கோன் மகளை சூரியகுல அரசகுமாரனுக்குச் சூழ்ச்சியாகத் திருமணம் செய்து விட்டானே! இந்த விசுவாமித்திரன் என் சாபத்திற்கு ஆளாகாமல் போய்விடுவானு! இவன் என்றைக்கும் அயோத்தி இராமனின் முடிவுக்கு உரியவனுக எல்லாப் பிறப்புக்களிலும் பிறக்கட்டும். இவன் தன் குறிக்கோளுக்காக

அனைவரையும் வேட்டைப் பொருளாக ஆக்கியதால் இவன் வேட்டைக்காரனாகவே பிறப்புக்கள் எடுத்து அலைந்து திரியட்டும். குருவாக விளங்கும் இவன் குருவின் கோப தாபங்களுக்கும், சாபங்களுக்கும் உரியவனாகவே பல பிறப்புக்கள் எடுக்கட்டும்' என்றும்;

(g1) 'குருதேவரே! <u>என் கணவரைப் போலவே எனது மருமகன் இராமனும் ஆறுகாலம் நீராடிச் சிவபூசை செய்யும் சிறந்த சிவபத்தனாகவே இருந்தான்</u>. ஆனால், அவன் சீதையைப் பிரிந்ததிலிருந்துதான் சிவபூசையை மறந்தான், திருநீறைத் துறந்தான். அதனால்தான் அவன் முறையற்ற முறைகளில் போர் புரியவும், நீதி நேர்மையற்ற செயல்களில் ஈடுபடவும், குரங்குகளைத் துணையாக்கிக் கொண்டு வாழும் காட்டு மனிதனாகவும் ஆகிவிட்டான். அவனைத் தனது சிவக்கோலம் சீர்திருத்திடும்; செம்மைப்படுத்திடும்; மெய்யறம் உணரச் செய்யும்; நேர்மையான வீரப்போர் விளைவிக்கத் தோன்றும் என்றெல்லாம் நம்பினாரே! என் கணவர்; அவர் நம்பிக்கை வீணாகி விட்டதே. அவர் மருமகன் சிவபூசையை மறந்தவனாக, திருநீறைத் துறந்தவனாக சிறந்த சிவபத்தரான அரக்கர் கோனை சூழ்ச்சியாகக் கொன்று சிவநெறி விரோதியாகி விட்டானே! சிவபூசைக்குப் பயன் இதுதானா! தாங்கள் அந்த இராமனுக்குச் சிறந்த சிவபத்தனாக வாழச் சொல்லியிருக்கக் கூடாதா! சிவபத்தர்களுக்கிடையே போர் நிகழத் தாங்கள் பார்த்துக் கொண்டிருக்கலாமா!' என்றும்;

(h1) 'குருதேவரே! சிவபத்தியில் சிறந்த அயோத்தி அரசனின் குடும்பம், மூவுலகிலும் சிறந்த சிவபத்திச் செல்வரான என் கணவருக்கே தீங்கு செய்யலாமா? இதனை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கலாமா?' என்றும்;

(i1) 'குருதேவரே!, சிறந்த சிவயோகியான சனகரின் வளர்ப்பு மகளாக வளர்ந்த என் மகள் சீதையைத் திருமணத்திற்குப் பிறகு அடையாளம் கண்டுகொண்ட கைகேயி, அரக்கர் மகள் அரசகுலத்தின் அரண்மனைக்குள் வாழக் கூடாது என்றெண்ணித்தானே என் மகளைக்

காட்டுக்கு அனுப்பினுள். இந்தக் கைகேயி அரக்கர் குல மகளே மணந்த இராமன் முடிசூட்டி நாடாளக் கூடாதே என்று கருதித்தானே இராமனுக்குப் பட்டம் சூட்டுவதைத் தடுத்துக் காட்டுக்கு விரட்டினுள். இவற்றை உணர்ந்திருந்த தாங்கள் ஏன் கைகேயியைத் தடுத்திருக்கக் கூடாது?' என்றும்;

(j1) 'குருதேவரே! சகல சாத்திறங்களும் பெற்ற தசரத மன்னன் என் மகள் சீதையை முழுமனதாக மருமகளாக ஏற்றுக் கொண்டார். ஆனுல், அவரது மூன்று பட்டத்தரசிகளும் என் மகளேயும், மருமகனேயும் நாட்டை விட்டு ஓட்டுவதில்தான் அக்கறையாக இருந்தார்கள். கைகேயி தான் பெற்ற இரண்டு வரங்களேப் பயன்படுத்தித்தான் என் மகளேயும், மருமகனேயும் காட்டுக்கு விரட்டினுள். அந்த மூன்று பட்டத்தரசிகளும் தாங்கள் தாலியறுத்தாலும் பாதகமில்லே; தன்னுடைய மருமகள் வாழக் கூடாது என்றுதான் நினேத்தார்கள். இந்தக் கொடியவர்களிடம் என் மகள் சீதை எப்படி வாழப் போகிருள்? நாளே நாடு திரும்பப் போகும் என் மகளுக்கு அயோத்தி அரண்மனேக்குள் வாழ்வு இருக்குமா? இருக்காதா? எப்படியும் அந்த இரக்கமற்ற கொடிய அரக்கிகள் என் மகளே மட்டுமாவது மீண்டும் காட்டுக்கு அனுப்பி விடுவார்கள். அப்பொழுது தாங்கள்தான் என் மகளேக் காப்பாற்ற வேண்டும். அவளே உங்களிடம் அடைக்கலம் தருகிறேன்' என்றும்;

(k1) 'குருதேவரே! எங்களுடைய அரக்கர் குலம் முற்றிலும் அழிந்து விட்டது. இனி என் மகள் சீதையின் வயிற்றில் பிறக்கும் குழந்தைகள்தான் எங்களுடைய அரக்கர் குலப் பெருமைகள் அனேத்தையும் வாழ வைக்க வேண்டும். எனவே, என்னுடைய மகள் வயிற்றில் பிறக்கும் குழந்தைகளுக்கு நீங்கள் குருவாக இருந்து அனேத்துக் கலேகளேயும் கற்பிக்க வேண்டும். என் மகளேக் கொடுமைப் படுத்தியவர்களேப் பழிக்குப் பழி வாங்க வேண்டும். அல்லது அவர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும். எனக்கு இந்த வரத்தை நீங்கள் தர வேண்டும்' என்றும்;

(I1) ‘குருதேவரே! என் மருமகன் எடுப்பார் கைப்பிள்ளையாகத்தான் இருக்கிறான். என் மகளின் அழகிலே மயங்கி கட்டுண்டு கிடந்த இராமன் தன்னுடைய தாய்மார்கள் சொல்லியதைக் கேட்டு 14 (பதினான்கு) வருடங்களுக்கு என் மகளோடு வாழ்ந்து முடித்து அவளைக் காட்டிலேயே விட்டுவிட்டு நாடு திரும்பத் துணிந்தான். அப்படிப்பட்ட அவனுக்கு என் மகளின் அருமையை உணர்த்தத்தான் என் கணவர் இலங்கை வேந்தன் அரக்கர்கோன் இராமனிடமிருந்து சீதையைப் பிரித்து அழைத்து வந்தார்.

என் மகள் சீதை, தன் தந்தையைக் கண்டவுடனேயே இளங்கன்று தாய்ப் பசுவை மோப்பத்தால் இனங்கண்டு ஓடிவருவதைப் போல் ஓடி வந்து கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கதறியழுதிருக்கிறாள். அதனைக் கண்டு வருந்தியே என் கணவர் இராமனைக் கண்டு நேரில் பேசாமல் சீதையை அவன் வருவதற்கு முன்பே தேரில் ஏற்றிக் கொண்டு வந்தார். ஆனாலும், நான் சீதையைச் சந்தித்து விட்டால் என் கோபத்தால் உடனே இராமனுடன் போர் செய்ய நேரிடும் என்றெண்ணி அஞ்சித்தான் என் மகள் சீதையை நாங்கள் தங்கியிருந்த அரண்மனையை விட அழகும், வசதிகளும் நிறைந்த அசோகவனத்தில் அவள் விருப்பம் போல் தங்கி மகிழ்ச்சியாக இருக்கச் செய்தார். ஆனாலும் அவள் தன்னுடைய கணவனின் வீட்டுப் பெருமையை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகவே அழுது புலம்பி அசோகவனம் வந்த அனுமனிடம் சண்டை போட்டுத் தன் கணவனை உடனே இலங்கை வரச் செய்தாள்.

இப்படிப் பட்ட என் மகள் தனக்குரிய அயோத்தி அரியாசனத்தில் பட்டத்தரசியாக அமர்ந்தேயாக வேண்டும். அந்த நிகழ்ச்சி இராமனின் முடிசூட்டு விழாவாக இருப்பதை விட என் மகள் சீதையின் அரியணை ஏறும் நிகழ்ச்சியாக, பட்டத்தரசியாக முடிசூட்டும் விழாவாக, சூரிய குலம் **சீதா இராமனி**ன் புகழால் நிலைத்த பேறு பெறுவதாக அமைய வேண்டும். தசரத இராமன், சூரியகுல இராமன், அயோத்தி இராமன் இனிமேல் என் மகளின் பெயரால் சீதா இராமன்

என்றும், வைதேகி இராமன் என்றும், சானகி இராமன் என்றும், இலக்குமி இராமன் என்றும் அழைக்கப் பட்டாக வேண்டும். ஏனெனில், என் மகள் தன் கணவன் வீட்டுப் பெருமைக்காகத் தன் தந்தையையும், தம்பிகளையும், தாயையும் பலியாகக் கொடுத்திருக்கிறாள். அவள் புகழ் என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டும். அதற்குச் சான்றாக சீதா இராமனின் அரியணை ஏறும் காட்சிதான் ஓவியங்களிலும், சிற்பங்களிலும், இலக்கியங்களிலும், வழிபாட்டுக் கூடங்களிலும் நிலைத்திருக்க வேண்டும். இந்த வரத்தை சோதனை மிகுந்த வாழ்க்கை வாழ்ந்த என் மகளுக்கு இறவாப் புகழைத் தேடித் தர நீங்கள்தான் நல்க வேண்டும். உங்களால்தான் இதைச் செய்ய முடியும்' என்றும்;

(m1) 'குருதேவரே! என் மகள் வயிற்றில் பிறக்கும் குழந்தைகள்தான் சூரியகுல அரியணையில் தொடர்ந்து அமர்ந்து வாழையடி வாழையாக அரசாட்சி செய்ய வேண்டும். அதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் நீங்கள்தான் செய்ய வேண்டும். அரக்கர் குலம் வாரிசுகள் இல்லாமல் போய்விட்டது. திரிசடையும் உயிர் வாழ்வாள் என்று சொல்ல முடியாது. அவள் சீதையை இராமனிடம் ஒப்படைத்ததும் எங்களது ஈமத்தீயில் எரிந்து சாம்பலாவாள். எனவே, எங்களின் குலக்கொழுந்தான சீதையை எப்படியாவது காப்பாற்றி எங்கள் குலம் விளங்கச் செய்ய வேண்டும். சூரியகுல அரச குடும்பத்தார்கள் என் மகளை இராமனை விட்டுப் பிரிப்பார்களேயானால் அவளுக்கு முழுப் பாதுகாப்பும் உங்களால்தான் வழங்கப்பட வேண்டும். உங்களுடைய மாணாக்கர்களில் வால்மீகிகளும், கம்பர்களும் அயோத்தியைச் சுற்றி நிறைய இருக்கிறார்கள். அவர்களுக்கு முன்கூட்டியே அறிவிப்பு வழங்கி என் மகளைப் பாதுகாக்க ஏற்பாடு செய்யுங்கள்' என்றும்;

(n1) 'குருதேவரே! இந்த வசிட்டனுக்கும், விசுவாமித்திரனுக்கும் போட்டாபோட்டி வந்தால் அரிச்சந்திரனோடு நின்றிருக்கக் கூடாதா? வசிட்ட புராணமும், விசுவாமித்திர புராணமும், அரிச்சந்திர

புராணத்தோடு நின்றிருக்கக் கூடாதா? அது எங்களுடைய அரக்கர் குல புராணங்களோடும் வளர்ச்சி பெற வேண்டுமா? அரக்கர் கோனின் முடிவால் தங்களுக்கு நிம்மதி வந்துவிட்டதாக வசிட்டனும், விசுவாமித்திரனும் நினைக்க வேண்டாம். என் மகள் சீதையின் வயிற்றில் பிறக்கும் அரக்கர் குல வாரிசு இவர்களை அழிக்காமல் விடாது. அடுத்த அழிவு இவர்களுக்குத்தான். இனிமேல் அரக்கர் குல ஆட்சி இலங்கையில் இருக்காது. அயோத்தியில் இருக்கும். இதைத் தாங்கள்தான் மெய்யாக்க வேண்டும்' என்றும்;

(o1) 'குருதேவரே! என் மகளின் மாமியார் கோசலை எப்படியும் தன் மகன் மனதைக் கெடுத்து என் மகளை வாழாவெட்டியாக்கிடுவாள். நீங்கள்தான் என் மருமகனுக்கு அறிவுரை கூறி என் மகளை வாழ வைக்க வேண்டும். எங்கள் குலச் செல்வியை நீங்கள்தான் பாதுகாக்க வேண்டும். இரு குலத்திற்கும் நீங்கள்தான் குருதேவர் என்பதால் உங்களால்தான் என் மகளைக் காப்பாற்ற முடியும். சனகனின் பெரும்படையோ, வசிட்ட விசுவாமித்திரர்களின் தவ வலிமையோ என் மகளைக் காப்பாற்ற முடியாது. என் மகள் இனி அனாதைதான். மூவுலகமும் ஆண்ட அரக்கர் கோனின் மகள் இப்படி அனாதையாகி விட்டாளே! இவளுக்கு எல்லா யுகங்களிலும் நிலைத்த புகழும், பெருமையும் ஏற்பட்டிட நீங்கள்தான் அருள்புரிய வேண்டும், உதவ வேண்டும், அனைத்து வகையான பாதுகாப்புக்களையும் நல்க வேண்டும்' என்றும்;

(p1) 'குருதேவரே! அயோத்தி அரண்மனையில் பணிபுரியும் கூனி மந்தரை [கூனி மந்தாரை = கூனி மாந்தரை = கூனி மாந்தாரை]க்குக் கூட என் மகள் சீதையைப் பிடிக்கவில்லை. எனவே, என் மகள் அயோத்தி அரண்மனையில் வாழ முடியாவிட்டாலும் சனகனின் மிதிலை அரண்மனையிலாவது வாழட்டும். அவளை மீண்டும் காட்டில் அலைய விட்டுவிடாதீர்கள். அவள் புகுந்த வீட்டிலும் சிறையிருக்க நேரிட்டு விட்டது. பிறந்த வீட்டிலும் சிறையிருக்க நேரிட்டு விட்டது. கணவனோடு துவங்கிய வாழ்வு

காட்டிலேயே நிகழ்ந்து விட்டது. இனியும் அவளுக்குச் சிறை வாழ்வோ, காட்டு வாழ்வோ தேவையில்லை. அவளுக்கு வளர்ந்த இடமான சனகனின் மிதிலையில்தான் நிம்மதியும், மகிழ்ச்சியும் கிடைத்தது. எனவே, அயோத்தி அரண்மனையில் அவளுக்கு எந்தப் பாதிப்பு ஏற்பட்டாலும் உடனே அவளை அவளுடைய வளர்ந்த இடமான சனகனின் மிதிலையில் கொண்டு போய் விட்டுவிடுங்கள். இப்போதிருந்தது போல் பாராமுகமாக இருந்து விடாதீர்கள். எங்களுக்குப் பிறகாவது எங்களது மகளைக் காக்கும் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள்' என்றும்;

(q1) 'குருதேவரே! சனகன் தன் மகளுக்குச் சுயம்வரம் நடத்திய போது என் கணவரிடம் மட்டும் "சனகனின் வளர்ப்பு மகள் சீதை எங்களுடைய அரக்கர் குலச் சுடர்க்கொடியே! குலக் கொழுந்தே! அரச மகளே! ..." என்ற பேருண்மையைத் தெரிவித்தீர்கள். அதை எனக்கும் தெரிவித்திருப்பீர்களேயானால் அப்பொழுதே என் மகள் சீதையின் வாழ்க்கையில் துன்பத்தின் நிழல் கூடப் படியாமல் தடுத்திருப்பேன். இனி என்ன செய்வது? அனைவரும் மாண்டு விட்டார்கள். நானும் மாளப் போகிறேன். ஆனால், எங்கள் அரக்கர் குலப் பெருமை மாளக் கூடாது. எங்களுடைய அரக்கர் குலம் என் மகள் சீதையின் வயிற்றில் பிறக்கும் வாரிசுகளால் வாழையடி வாழையாக இந்த யுகத்தையே ஆள வேண்டும். அதற்கு நீங்கள்தான் உதவ வேண்டும் குருதேவரே!' என்றும்;

(r1) 'குருதேவரே! எங்கள் குல இறுதி மருமகன் மானுடனாக இருந்தான் என்ற இழிவையும், பழியையும் போக்குவதே அரிது. இவற்றிற்கெல்லாம் மேலாக அவன் முறையற்ற முறையில் பல போர்களைச் செய்தான்; நீதியும் நேர்மையும் இல்லாத முறையில் பலரைக் கொன்றான் என்ற பழிச்சொல்லையும், இழிச்சொல்லையும் எப்படிப் போக்குவது? இதற்கு நீங்கள்தான் உதவ வேண்டும். எப்படியாவது புதிய சில தருக்க நியாயங்களை வழங்கி எனது மருமகன் செய்தவையனைத்தும் நீதியானவையே, நெறியானவையே,

முறையானவையே என்று உலகம் நம்பச் செய்துவிடுங்கள். அப்பொழுதுதான் எங்கள் குலம் தழைக்க வாழப் போகும் எங்கள் மகளின் வாழ்க்கை சிறக்கும். இராவணப் போரை ஒரு பெரிய புராணமாக்கி விடுங்கள்' என்றும்;

(s1) 'குருதேவரே! உலக மக்கள் அனைவரும் போற்றுகின்ற சிவ கீதை, திருமால் கீதை, பிறமண் கீதை, சத்தி கீதை, திருமகள் கீதை, கலைமகள் கீதை, நாரதர் கீதை, இயமன் கீதை, குபேரன் கீதை, இந்திரன் கீதை, தேவேந்திரன் கீதை, மாரி கீதை (வருணன் கீதை), காளி கீதை (அக்கினி கீதை), காத்தாயி கீதை (வாயு கீதை), முருகன் கீதை, கணபதி கீதை ... முதலியவைகளைப் போல் என்னுடைய கீதை (வண்டமர்குழலி கீதை), அரக்கர் கோன் கீதை (இராவணன் கீதை), அரக்கர் கோன் தம்பி கீதை (கும்பகர்ணன் கீதை), மேகநாதன் கீதை முதலியவை சிறப்படையட்டும். எனக்குப் பிறகு என் மகள் சீதை தன்னை ஈன்றெடுத்த தந்தையையும், தாயையும், தன் தந்தையின் உடன் பிறந்தவர்களையும், தன்னுடன் பிறந்தவர்களையும், தன்னுடைய அரக்கர் குலத்தையும் எண்ணியெண்ணி, குமுறிக் குமுறி, கதறிக் கதறி, வெதும்பி, அரற்றி, அழுது புலம்பி எழுதப் போகின்ற கீதை இதுவரை எழுதப்பட்டுள்ள மானுட இனத்து வசிட்டன் கீதை, விசுவாமித்திரன் கீதை, தசரதன் கீதை, சனகன் கீதை ... முதலிய அனைத்துக் கீதைகளையும் விட உயர்ந்ததாக, பயன்மிக்கதாக, சுவைமிக்கதாக இருந்திடும். அதைத் தாங்கள்தான் இறவா இலக்கியமாக்க வேண்டும்' என்றும்;

(t1) 'குருதேவரே! என் மருமகனும், மகளும் இனிய இல்லறம் நடத்த விடாமல் அவர்கள் கூடவே இருந்து தொல்லை கொடுத்து வரும் இலக்குவனை அற்பப் பதராக எண்ணாமல் அவனை மிக எச்சரிக்கையோடு கண்காணித்து என் மகள் வாழ்க்கையைக் காப்பாற்றுங்கள். அவனாலோ அல்லது அவனைத் தூண்டிவிட்ட தசரதன் மனைவிகள் மூவராலோ என் மகளின் இனிய இல்லறம் கெட்டுவிடக் கூடாது, பாதிக்கப்பட்டுவிடக் கூடாது' என்றும்; .....

இப்படிப் பலவாறு வேண்டுகோள்களை விடுத்துக் கொண்டிருந்த வண்டமர்குழலி, இராவணன் உடல் மீது மயங்கி விழுந்து உயிர் துறந்தாள் என்று யக்ஞவல்லி குறிக்கின்றார். இவர், வண்டமர்குழலியின் புலம்பல், வண்டமர்குழலியின் அரற்றல், வண்டமர்குழலியின் ஒப்பாரி என்ற சொற்களைப் பயன்படுத்தி வண்டமர்குழலியின் இறுதி வாசகங்களை நூற்றுக்கணக்கில் தொகுத்து இருக்கின்றார். இவற்றுக்கு **'இராவணாற்றி'** என்ற தலைப்பும் உண்டு. இராவணன் வளர்த்த பேசும் பறவைக் கூட்டம் [இன்றைக்கு 'மைனா' என்று அழைக்கப்படுவது] வண்டமர்குழலி இராவணனுக்காக அழுது புலம்பி அரற்றிய அனைத்து வாசகங்களையும் கூறிக் கொண்டே எங்கும் பறந்து திரிந்தன என்று குறிக்கின்றார். எனவேதான், இப்பறவைக்கு இராவணன் ஆற்றி => இராவணாற்றி என்றே பெயர். இன்றைக்கும் இப்பறவைகளின் பேச்சொலிகள் வண்டமர்குழலியின் அரற்றலாக, புலம்பல்களாக, ஒப்பாரியாக, அழுகையாக ..... இருக்கின்றன. இந்தப் பறவைகளைப் பற்றிய செய்தி அரச பாரம்பரியங்களிலும், குரு பாரம்பரியங்களிலும் மிகத் தெளிவாகக் குறிக்கப் பட்டுள்ளது.

***//உண்மை நகல்//***

***//இதன் மூலநகல்: சித்தர் முத்தீசர் எனப்படும் மதுரைச் சித்தரடியான் திரு வெ.செகதீசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. இறுதிப் பக்கங்கள் 3 மட்டும் வேறு ஒருவருடைய கையெழுத்தில் இருந்தது.//***

***[சித்தர் இராமாயணக் கட்டுரைகள் தொடரும்.....]***

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த ‘குமரிக்கண்டம்’.

**காலம்:** பதினெண்சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு.43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** தமிழ் மொழி.

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சீவாலயங்கள்.

**இந்துமத நூல்கள்:**

| | | |
|---|---|---|
| பூசைமொழி நூல்கள் | - | 108 |
| பூசைவிதி நூல்கள் | - | 48 |
| தத்துவ நூல்கள் | - | 96 |
| செயல்சித்தாந்த நூல்கள் | - | 144 |
| குருபீட நூல்கள் | - | 36 |
| ஆக மொத்தம் | - | 432 நூல்கள். |

**இந்துமதப் பயன்கள்:** தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

**இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்.**

**அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.**

**அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.**

*__ஆதாரம்:__ மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குரு பாரம்பரியம்.



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார். இவர் இலைமறை காயாகவே சித்தர் இராமாயணத்தை வளர்க்கவும், வாழ்வு பெறவும் செய்திட்டார். ஆனால், பிறமண்ணினரான பிருமணர்கள் என்னும் வடஆரியர்கள் மிகுந்த முன்னெச்சரிக்கையோடு சித்தர் இராமாயணம் செல்வாக்குப் பெற முடியாமல் செய்து விட்டார்கள்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் உள்ள, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org
Email: indhuism@gmail.com